[2013 ஏப்ரல் 5

163—

தேரோட்டம்

***22238—திரு. எம். ரெங்கசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயிலுக்குத் தேர் செய்யவும், தேரோட்டம் நடத்தவும் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயில் சட்டப் பிரிவு 46 (iii) கீழ் பிரசுரிக்கப்பட்ட முதுநிலை திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிருவாகம் பரம்பரை அறங்காவலராலும், செயல் அலுவலராலும் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயில் சோழ மன்னர் இராஜராஜ சோழனால் 1,000 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு, சோழர்கால கட்டடக் கலைக்கும், சிற்பக் கலைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறது. பலவகையிலும் சிறப்புமிக்க இத்திருக்கோயில் உலகப் பாரம்பரியச் சின்னமாக யுனெஸ்கோ நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டு, மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் தேரோட்டம் நடைபெற்று சுமார் 100 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது.

இத்திருக்கோயில்களின் திருவிழாக்கள் மற்றும் பிரம்மோற்சவங்கள் இறைவனின் ஐந்தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைதல் ஆகியவற்றை உலக மக்களுக்குப் பறைசாற்றும் விதமாக தேரோட்டத்தை உள்ளடக்கி கொடியேற்றம் முதல் தீர்த்தத் திருவிழாவரை ஆண்டுக்கு ஒருமுறை படைக்கும் தொழிலை கொண்டுள்ள நான்முகனான பிரம்மனே பூவுலகுக்கு வந்து இறைவனுக்குத் தொண்டு செய்யும் விதமாக நடத்துவது என்பது மக்களின் நீண்டகால நம்பிக்கையாக உள்ளது.

2013 ஏப்ரல் 5]

அதிலும், முக்கியமாக ஊர்கூடி தேர் இழுத்தால்தான், தேர்த் திருவிழா கொண்டாட முடியும். இது பல்வேறு தரப்பு மக்களிடையே ஒற்றுமையை மறைமுகமாக வலியுறுத்தும் திருவிழாவாகவும், பல்வேறு திருக்கோயில்களில் நடைபெற்று வருகிறது. இத்தகைய பாரம்பரியமிக்க திருவிழாக்கள் அனைத்துத் திருக்கோயில்களிலும் தொடர்ந்து நடத்தப்பட வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றபின் திருத்தேர்களைச் சீரமைக்கவும், திருத்தேர்களைப் பாதுகாக்கவும், தடைப்பட்டு நின்றுபோன தேர்த் திருவிழாக்களை நடத்தி, தமிழர்களின் பண்பாட்டை நிலைநிறுத்தவும் ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி கடந்த 2011-2012 ஆம் நிதியாண்டில் 17 திருத்தேர் திருப்பணிகளுக்கு ரூபாய் 94.34 இலட்சமும், 2012-2013 ஆம் நிதியாண்டில் 33 திருத்தேர் திருப்பணிகளுக்கு ரூபாய் 143.23 இலட்சமும் நிதியுதவி வழங்கப்பட்டு திருத்தேர் திருப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

இதனைத் தொடர்ந்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 100 ஆண்டுக் காலமாக இருந்துவரும் பக்தர்களின் நீண்டகால எதிர்பார்ப்பினை நிறைவேற்றும் வகையில், தஞ்சை அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயில் தேரோட்டத்தினை, தஞ்சாவூர், ராஜ வீதியில் நடத்த ஏதுவாக ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக தேர் ஒன்றினை உருவாக்கிட ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி திருக்கோயிலுக்குப் புதியதாக தேர் செய்திட விரிவான மதிப்பீடுகள் தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புதிய தேர் செய்யும் பணி விரைவில் முடிக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அவர்களின் மேலான ஆணைகளைப் பெற்று இத்திருக்கோயில் தேரோட்டம் மிகச் சிறப்பாக நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 ஏப்ரல் 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள்.

திரு. எம். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி டெல்டா விவசாயிகளுடைய வாழ்வாதாரத்தைக் காப்பாற்றுவதற்காக, உச்ச நீதிமன்றத்தில் சட்டப் போர் நடத்தி, காவேரி உரிமையை மீட்டெடுத்துத் தந்த எங்களுடைய காவேரித் தாய்! (மேசையைத் தட்டும் ஒலி) நான் எந்நாளும் வணங்கும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். தஞ்சை நகரம் என்றால் அதனுடைய ஒட்டுமொத்த வளர்ச்சியும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் தஞ்சைக்கு உருவாக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டைத் தஞ்சையிலே நடத்தித் தந்தபோது, சுற்றுப் புறவழிச் சாலையை அமைத்துத் தந்தவர்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சுற்றுப் புறவழிச் சாலையை முழுவட்டச் சாலையாக அமைப்பதற்காக தற்போது மூன்றாவது முறையாக பொற்கால ஆட்சி நடத்தும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியிலே, 98 கோடி ரூபாயிலே சுற்றுப் புறவழிச் சாலையை தஞ்சை நகருக்கு உருவாக்கித் தந்த, ஆணையிட்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு, தஞ்சை மாவட்ட மக்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாமன்னன் இராஜராஜன் உருவாக்கித் தந்த விண்ணை முட்டுகின்ற நம்முடைய தஞ்சை பெரிய கோயில் கட்டடக் கலைக்கும், சிற்பக் கலைக்கும் உலகப் பிரசித்திப்பெற்றது. அந்தப் பெரிய கோயிலினுடைய தேரோட்டம் 100 ஆண்டுகளுக்கு முன்னால் சிறப்பாக நடைபெற்றதாக நம்முடைய முன்னோர்கள் எல்லாம் இங்கே பெருமையோடு பேசிக்கொண்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட அந்தத் தேர் இப்போது இல்லாமல் இருக்கின்றது. எனவே, திருக்கோயில்களுக்கெல்லாம் குடமுழுக்கு நடத்தி, தேர்களையெல்லாம் புதிதாகச் செய்து தேரோட்டம் நடத்தி வருகின்ற மாண்புமிகு அம்மா அவர்கள் நாங்கள் கேட்டவுடன் அந்தத் தஞ்சைப் பெரியகோயிலுக்கு-பிரகதீஸ்வரர் ஆலயத்தினுடைய திருத்தேருக்கு 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி அந்தத் தேரினை செய்து கொடுத்து அந்தத் தேரோட்டத்தினை

நடத்துவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) ஆணையிட்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றியை காணிக்கையாக்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 164, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

164—

தனி மாவட்டம்

***5809—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தைப் பிரித்து மேட்டூரைத் தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து மேட்டூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வினா எழுப்பியுள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வகுத்துள்ள குறைந்தபட்ச அளவுகோலான பிரிக்கப்படுகின்ற மாவட்டத்தினுடைய மக்கள்தொகை, பிரிக்கப்படுகின்ற மாவட்டத்தினுடைய பரப்பளவு, பிரிக்கப்படுகின்ற மாவட்டத்தினுடைய வருவாய்க் கோட்டங்கள், வருவாய் வட்டங்கள், வருவாய்க் கிராமங்கள் ஆக இவை அனைத்தையும் இன்றைக்கு ஒருங்கிணைத்துப் பார்க்கின்றபோது, இது எந்தவிதமான அளவுகோலையும் பூர்த்தி செய்யாமல் இருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள சேலம் மாவட்டத்தைப் பிரித்து, மேட்டூரைத்